பக்கங்கள் எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

ர் 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 16 செவ்வாய்க்கிழமை 01-09-1992 UTHAYAN — A lively National Tamil Daily கதிர் 278

# ஜனாதிபதித் தேர்தல் வழக்கு: உயர்நீதிமன்று இன்று தீர்ப்பு!

## கொழும்பில் பெரும் பரபரப்பு

கொழும்பு, செப்டம்பர் 1

ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேபனை மனு மீதான தீர்ப்பை யர் நீதிமன்றம் இன்று காலை 10 மணிக்கு வழங்கும் என்று த்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதனையடுத்து தென்னிலங்கையில் அரசியல் பரபரப்பும் நெருக் டியும் உச்சக் கட்டத்தை அடைந்திருக்கின்றன.

1988 ஆம் ஆண்டு டிசம்ப நடைபெற்ற ஜனாதி தேர்தலில் ஆர். பிரேம ா வெற்றிபெற்றதைத் சபித்து அத்தேர்தலில் ியுற்ற திருமதி சிறி வா பண்டாரநாயக்கா த மனுவைத் தாக்கல் செய்திருந்தார் என்பது தெரிந்ததே.

இந்த வழக்கின் மீதான தீர்ப்பை கொழும்பு ஹல்ஸ் டோர்ப்பில் உள்ள உயர்நீதி மன்ற வளாகத்தில்—301 ஆம் இலக்கக் கட்டடத்தில் வைத்து -இன்று காலை நீதி யரசர்கள் வெளியிடுவர்.

பிரதம நீதியரசர் ஜி. பி. எஸ். டி. சில்வா, நீதியரசர் கள் பி. இராமநாதன், பிரி யந்தா பெரேரா, ஏ. எஸ். விஜயதுங்க, எல். பி. குண வர்த்தன ஆகியோர் தீர்ப்பை வெளியிடுவர். (உ-எ)

## தேர்தல் வழக்கு தள்ளுபடியாகும்?

கொழும்பு, செப். 1

திரு. ஆர். பிரேமதாஸா வுக்கு எதிரான ஜனாதிபதித் தேர்தல் வழக்கு பெரும் பாலும் தள்ளுபடி செய்யப் படலாம் என அரசியல் விமர் சகர்களிடையே கருத்து நிலவு கிறது.

பிரபல சிங்கள அரசியல் வாரப் பத்திரிகையான ''ராவய'' முன்பக்கத் தலைப் புச் செய்தியாக இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

கணிசமான எண்ணிக்கை யான வாக்காளர்கள், தமது வாக்குகளைப் பிரயோகிக்க வாய்ப்பு வழங்கப்படவில்லை என்ற ஒரு காரணத்துக்காக நடைபெற்று முடிந்த தேர் தலை தள்ளுபடி செய்யமுடி யாது என விமர்சகர்கள் அபிப்பிராயப்படுகின்றனர் என்றும் அச்செய்தியில் தெரி விக்கப்பட்டது. (உ-10)

## பௌத்த பிக்குமார் குழு மீண்டும் வடக்கே வரும்

கொழும்பு, செப். 1

விகளினால் தடுத்து வைக் ப்பட்டிருக்கும் 40 பொலி ரையும் மற்றும் இராணு ிப்பாய் ஒருவரையும் விடு ும் புதிய முயற்சியாக த்த பிக்குகள் அடங்கிய க்குழு ஒன்று மீண்டும் ழ்ப்பாணம் புறப்பட யத்தமாகி வருகிறது.

அரச சார்பு சிங்கள வார ிதழான ''சிலுமின'' இந் செய்தியை வெளியிட் டுள்ளது.

மனித உரிமைகள் இயக்கத் தின் அனுசரணையுடன் வடக்கே வரும் இக்குழுவுக்கு இம்முறையும் மாதம்பே அஸ் ஸாஜி தேரோவே தலைமை தாங்குவார் என்றும் தெரிவிக் கப்படுகிறது.

கடந்த ஏப்ரலில் வடபகு திக்கு விஜயம் செய்த தென் விலங்கை பிக்குமார் குழு வுக்கு அஸ்ஸாஜி தேரரே தலைமை தாங்கினார் என் பது தெரிந்ததே.

தூதுக்குழு எந்நேரமும் புறப்படத் தயாராக இருப் பதாகவும் —

ஜனாதிபதி மற்றும் பாது காப்பு படையினரின் அனு மதிக்கே தாங்கள் காத்திருப் பதாகவும் அஸ்ஸாஜி தேரர் தெரிவித்தார்.

தூதுக்குழு யாழ்ப்பாணம் செல்வதற்கான அனுமதி அடுத்த வாரத்துக்குள்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## பிரேமதாஸா தோற்றால் அரசியல் நெருக்கடி எழும்!

கொழும்பு, செப். 1

ஜனாதிபதித் தேர்தல் வழக் கில் பிரேமதாஸா தோல்வி யுற்றால் தென்னிலங்கையில் பெரும் அரசியல் நெருக்கடி எழும் எனக் கருதப்படுகிறது.

நடைபெற்று முடிந்த தேர் தல் செல்லுபடியற்றது என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித் தால் —

அரசமைப்பின் 39 [2] ஆம் பிரிவின் கீழ் ஜனாதிபதிக்கான சகல அதிகாரங்களை ஆர். பிரேமதாஸா உடனடியாக இழந்துவிடுவார்.

அத்தகைய தீர்ப்பு வழங்கப் பட்ட நேரம் முதல் —

மூன்று மாதகாலத்துக்குள் புதிய ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டு ஜனாதிபதி ஒருவர் தெரிவாகும் வரை, பிரதம மந்திரியே பதில் ஜனாதிபதியாகக் கடமை யாற்ற வேண்டும் என அர சமைப்பின் 39 [2] ஆம் பிரிவு

[7 ஆம் பக்கம் பார்க்க]

## பூமியதிர்ச்சி நடவடிக்கை கொப்பேயின் திட்டம் அல்ல!

### 'ராவய' வெளியிட்டுள்ள புதிய தகவல்கள்

கொழும்பு, செப். 1

். குடா நாட்டில் சமீ மேற்கொள்ளப்பட்ட ிர்ச்சி இராணுவ நட வெறும் கன் பு ஆகும். அராலித் கண்ணிவெடியில் லப்பட்ட லெப். ஜென ன்ஸில் கொப்பேகடுவ த்த திட்டத்துக்கும் ும் சம்பந்தமே இல்லை. களைக் கைப்பற்று கொப்பேகடுவவின் திட் இருந்தது.

வ்வாறு 'ராவய' சிங் களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ். குடா நாட்டைக் கைப்பற்றும் கொப்பேகடுவ வின் திட்டம் ''ஜன கீர்த்தி'' எனப் பெயரிடப்பட்டு கடந்த ஆகஸ்ட் 14 ஆம் திகதி ஆரம் பிக்கப்படவிருந்தது.

கொப்பேகடுவ வகுத்திருந்த திட்டத்தின்படி தெல்லிப்ப ழையில் இருந்து விமானப் படையின் உதவியுடன் தரைப்படை அணி ஒன்று மானிப்பாயை நோக்கிச் செல் லும்.

அதே சமயம், மற்றொரு தரைப்படை அணி கடற்படை யின் உதவியுடன் ஊர்காவற் றுறையில் இருந்து அராலித் துறையூடாக மானிப்பாய் நோக்கிச் செல்லும்.

இந்த இரு அணிகளும் மானிப் பாயில் இணைந்து யாழ். நகரை நோக்கி முன்னேறும்.

இந்த இராணுவ நடவடிக் கையின் போது பெருமளவு டாங்கிகளை படையினர் பயன்படுத்த இருந்தனர்.

இவ்வாறு 'ராவய' பத்தி

[7 ஆம் பக்கம் பார்க்க]

## இரண்டு வருட யுத்தத்தில் 7,621 படையினர் காயம்!

### 800 பேர் கால்களை இழந்தனர்

கொழும்பு, செப். 1

10-06-1990 முதல் இவ் வாண்டு ஆகஸ்ட் மூன்றாம் திகதி வரை வடக்கு-கிழக்கு யுத்தத்தில் காயமடைந்த படையினரின் எண்ணிக்கை 7 ஆயிரத்து 621 என்று தெரி விக்கப்படுகின்றது.

''இவர்களில் சுமார் 800 பேர் கால்களை இழந்துள்ள னர். பெரும்பான்மையோர் முழங் காலுக்கு கீழே ஒரு காலை இழந்தவர்களாவார் கள்'' — என்று படை அதி காரி ஒருவர் தெரிவித்தார்.

இன்னும் சிலர் இரண்டு கால் களையும் இழந்துள்ளனர். காயமடைந்தவர்களில் 303 பேர் அதிகாரிகள் தரத்தைச் சேர்ந்தவர்கள்.

வடக்கு — கிழக்கு யுத்தத் தில் தனது ஒரு காலை இழந்த சிப்பாய் ஜயக்குமார என்ப வர், விரக்தி காரணமாக அண்மையில் ஹொரணையில் தற்கொலை செய்துகொண் டார்.

''இப்போரில் காயமடைந்த படையினரில் விரக்தியில் தற்

[7 ஆம் பக்கம் பார்க்க]

குளம் அகழ்ந்து நீர் வளம் பெருக்குவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை - இந்திய ஒப்பந்தம் தோல்வி அடைந்து விட்டது

## குஜ்ரால் கூறுகிறார்

கொழும்பு, செப். 1

1987 இலங்கை - இந்திய ஒப்பந்தம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுவதில் தோல்வி அடைந்து விட்டது. இப்போது அந்த ஒப்பந்தம் செல்லுபடியற்றதாகி விட்டது. இலங்கை அரசமைப்புச் சட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள, அந்த ஒப்பந்தத்தின் சில ஷரத்துக்கள் மட்டுமே இன்னும் செல்லுபடியானதாக உள்ளன.

இந்தியாவின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஐ.கே. குஜ்ரால் முன்கண்டவாறு 'சண்டே ஒப்சேவருக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு இணைக்கப்படவேண்டுமா, இல்லையா என்பது குறித்தும் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனுடன் பேச்சு நடத்துவது பற்றியும் தீர்மானிக்க வேண்டியது இலங்கையே என்றும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய நரசிம்மராவ் அரசு ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிரான கொள்கை கொண்டது என்பதை அவர் மறுத்தார்.

# செஞ்சிலுவை நிர்வாகிகள் தெரிவு 13 ஆம் திகதி

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் எதிர்வரும் 13 ஆம் திகதி யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி ஜூபிலி மண்டபத்தில் நடைபெறும்.

தற்போது இடைக்கால சபை ஒன்றினால் நிர்வகிக்கப்பட்டு வரும் யாழ். கிளைக்குப் புதிய தலைவர், உபதலைவர், செயலாளர், பொருளாளர், மற்றும் ஐந்து நிர்வாகசபை உறுப்பினர்கள் ஆகியோர் தேர்தல் மூலம் தெரிவாகவுள்ளனர்.

நாளை இரண்டாம் திகதி முதல் 4 ஆம் திகதிவரை இந்தத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப் படும் என்றும் —

தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களை விரும்பியோர் 5 ஆம், 6 ஆம் திகதிகளில் வாபஸ் பெற்றுக்கொள்ளலாம் என்றும் இடைக்கால நிர்வாக சபையின் செயலாளர் திரு: வி. கனநாதன் தெரிவித்தார்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் 14 பிரிவுகளைச் சேர்ந்த 80 பிரதிநிதிகள் தேர்தலில் கலந்து கொண்டு வாக்களிக்கவுள்ளனர். [உ-5]


சுன்னாகம் வரியப்புலம்

**மகாமாரியம்மன் ஆலய வருடாந்த**

## உற்சவ பூர்த்தி விழா

**01-09-92 இன்று காலை விசேட சங்காபிஷேகம்**

மாலை நிகழ்ச்சிகள்:- 5.00 மணிக்கு ஆரம்பமாகும்.

(I) உற்சவ காலங்களில் பெரிய புராண தொடர் சொற்பொழிவு ஆற்றிய ஆசிரியர் திரு. ஆறு. திருமுருகன் அவர்களுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படும்,

(II) பண்ணிசை நிகழ்வு

(III) பட்டி மண்டபம்
இணுவில் சைவ மகாஜனா வித்தியாசாலை மாணவர்கள்.

[4958] 10 ஆம் திருவிழா உபயம்



## மொடேண் எடியுக்கேஷன் சென்ரர்

[கரவெட்டி]

## A/L 93

**துரித மீட்டல் வினா-விடை வகுப்புகள்**

ஆரம்பம்: 01 09-1992

| பாடங்கள் | | ஆசிரியர்கள் |
|---|---|---|
| பொருளியல்: | — | திரு. லோகசிங்கம் |
| கணக்கியல் | — | திரு. சரவணபவன் |
| வர்த்தகவியல்: | — | |
| அளவையியல்: | — | திரு. விக்கி |
| இந்துநாகரிகம்: | — | திரு. ஜோதீஸ்வரன் |
| தமிழ்: | — | திரு: நடராஜா |

நேரம்: காலை 8-00 மணி.

-நிர்வாகி.

[22382]


## உற்சவங்கள்

கொழும்புத்துறை, செப். 1

கெற்பலி அருள்மிகு ஸ்ரீசிவன் கோவில் மகாகும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை விஷேச சங்காபிஷேகம், பூசை ஆராதனை வழிபாடுகளுடன் இடம் பெறும். [உ-30]

★ ★ ★

யாழ்ப்பாணம், செப். 1

புன்னாலைக் கட்டுவன் ஈவினைப் பிள்ளையார் கோவிலின் வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

★ ★ ★

கொக்குவில் மேற்கு அருள்மிகு மஞ்சவனப்பதி முருகன் கோவில், நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆகியவற்றின் வருடாந்த மகோற்சவங்கள் நாளை நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். (த-68-162-100)

★ ★ ★

தென்மராட்சி, செப். 1

சாவகச்சேரி வாரீவனநாதசிவன் கோவில் லட்சார்ச்சனை இறுதி நாளான இன்று மாலை 5.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக இந்துநாகரீகத் துறை தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் "திருக்கோவில் மரபு" என்னும் பொருள் பற்றி சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார். [உ-117]

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், செப். 1

மல்லாகம், கோட்டைக்காடு ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக்கழகம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடத்தும் 7 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:

★ ஸ்கந்தா அணி எதிர் அண்ணா அணி.

★ பாடும்மீன் அணி எதிர் சென். அன்ரனிஸ் அணி. [உ-த]

## 'குமண' வருவதில் தாமதம்

யாழ்ப்பாணம், செப். 1

'குமண' கப்பல் எதிர்வரும் 10 ஆம் திகதிக்குப் பின்னரே பருத்தித்துறைக்கு வரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கப்பல் தனது ஒழுங்கில் இன்று இரண்டாம் திகதி பருத்தித்துறையை வந்தடையும் என முன்னர் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கொழும்பு துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம் காரணமாக, கப்பல் வருவதில் தாமதம் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [உ-5]

## நாளை

யாழ்ப்பாணம், செப். 1

"பனைவள அபிவிருத்தியும், அரச சார்பற்ற நிறுவனங்களும்" என்னும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று நாளை புதன் காலை 9-30 மணிக்கு யாழ். வை. எம். ஸி. ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது. [உ-5]

## தூதுக்குழு சீனா சென்றது

கொழும்பு, செப். 1

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தூதுக்குழு ஒன்று கட்சியின் உபதலைவர் டி யூ குணசேகர தலைமையில் சீனா சென்றுள்ளது. [த-5]

# 724 தொண்டர் ஆசிரியருக்கு விரைவில் நியமனங்கள்

கொழும்பு, செப். 1

வடபகுதியில் மொத்தம் 724 தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நியமனம் வழங்கப் படும் என்று வடக்கு—கிழக்கு மாகாணசபை கல்வி கலாசார அமைச்சின் செயலாளர் திரு: எம். ஏ. ஸி. முகைதீன் தெரிவித்தார்.

கொழும்பு கல்விச் சேவைச் சபையில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டதாக அவர் சொன்னார்:

யாழ். மாவட்டத்தில் 469 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 157 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 59 பேரும், மன்னார் மாவட்டத்தில் 39 பேரும் நியமனம் பெறுவர் என்றும் —

அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் மாவட்டக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வவுனியாப் பகுதியிலிருந்து வெளியேற 2,000 சிங்களக் குடும்பங்கள் விருப்பம்

கொழும்பு, செப். 1

வவுனியாப் பகுதியில் குடியேற்றப்பட்டிருக்கும் சுமார் 2 ஆயிரம் சிங்களக் குடும்பங்கள் தம்மை அங்கிருந்து வேறு இடங்களுக்கு மாற்றுமாறு கோரியிருப்பதாகச் சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வவுனியா பிரப்பங்குளம் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் அண்மையில் தாக்குதல் நடத்தியதை அடுத்து அப்பகுதியிலிருந்த சிங்கள மக்கள் அங்கிருந்து வெளியேறிவிட்டனர் என்றும் அச் செய்தியில் தெரிவிக்கப் பட்டது. [உ-10]

## விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

அரச ஊழியர்களுக்கான வினைதிறன் காண், மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சைகளுக்கு விண்ணப்பிப்பதற்கான முடிவுத் திகதி செப்டெம்பர் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [த-5]

## தேர்தல் வழக்குத் தீர்ப்பு

# சு.க, ஐ.தே.க. இரண்டிலும் நெருக்கடியைக் கிளப்பும்

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை மனு மீதான தீர்ப்பு யாருக்குச் சாதகமாக அமைகின்றதோ, இல்லையோ, இரு பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் பெரும் நெருக்கடிகளை சந்திக்க வேண்டிய அரசியல் நிலை உருவாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வழக்குத் தீர்ப்பு தமக்குச் சாதகமாக வெளியானால் ஜனாதிபதி பிரேமதாஸா தமது கட்சியில் இருந்து தமக்கு எதிரானவர்களை வெளியேற்றும் முயற்சியில் தீவிரமாக ஈடுபடுவார். என்று ஊகம் வெளியிட்டிருக்கிறது.

இதற்கு ஆதாரமாக அவர், கடந்த வெள்ளிக்கிழமை நடந்த கூட்டம் ஒன்றில் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் நிகழ்த்திய பேச்சு ஒன்றை அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

"யானை போன்ற என்னை கழுகுகளினால் தோற்கடிக்க முடியாது. எம்மிடையே காட்டு யானைகளும் உள்ளன. விரைவில் அவற்றை நான் துரத்துவேன்" — இவ்வாறு திரு. பிரேமதாஸா அக் கூட்டத்தில் பேசியிருந்தார்.

இதேவேளை—

ஜனாதிபதி தேர்தல் வழக்கில் தீர்ப்பு திருமதி பண்டார நாயக்காவுக்குப் பாதகமாக அமைந்தால், அவரை சுதந்திரக்கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து விலகும்படி, சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஒரு பிரிவினர் கோரவுள்ளனர் என்று தெரிவிக்கப் படுகின்றது.

தீர்ப்பு அவருக்கு சாதகமாக அமைந்தால், அவருக்கு எதிராக சுதந்திரக் கட்சிக்குள் கோஷ்டி சேர்ந்திருப்பவர்கள் பாடு சிக்கலாகி விடும் என்று கூறப்படுகிறது.

இதேவேளை—

"நாட்டில் உள்ள பட்டாசுகளை எல்லாம் முதலாளிகள் வாங்கிக்குவித்து வைத்துள்ளார்கள்" — என்று 'சண்டே ஐலண்ட்' தகவல் வெளியிட்டுள்ளது.

[மற்றும் இரு செய்திகள் 3 ஆம் பக்கத்தில்] [த-எ]

# எனது யோசனையை ஏற்றிருந்தால் உயிர்ப்பலிகளைத் தடுத்திருக்கலாம்

## அமைச்சர் தொண்டமான்

கொழும்பு, செப். 1

"இனப்பிரச்சினைக்குத் தீர்வாக நான் சமர்ப்பித்த யோசனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பின் பல உயிர்கள் இந்த நாட்டில் காப்பாற்றப்பட்டிருக்கும். எனது பணி இன்னும் முடியவில்லை.

கடந்த 30 ஆம் திகதி தனது எண்பதாவது பிறந்த தினத்தைக் கொண்டாடிய அமைச்சர் தொண்டமான் கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

"இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு அடுத்த இரண்டு மாதங்களினுள் ஏதாவது அர்த்தமுள்ள தீர்வு ஒன்றுடன் வரும் என்று நான் நம்புகின்றேன்" — என்றும் அவர் அப்பேட்டியில் தெரிவித்தார். (உ-த-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் ... மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

# வடபகுதிக் கரையோர ரோந்துக்கு பத்து அதிவேக விசைப் படகுகள்

## காயமடைவோரை ஏற்றவும் உதவுமாம்

வடபகுதியில் உள்ள கரையோரப் பகுதிகளில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக பத்து அதிவேகப் படகுகளை கடற்படையினர் உள்ளூர் படகு தயாரிப்பு நிறுவனம் ஒன்றிடமிருந்து கொள்வனவு செய்துள்ளனர்.

ஆழம் குறைந்த கரையோரப் பகுதிகளில் இப்படகுகள் பயன்படுத்தப்படக்கூடியவை என்றும் —.

காயம் அடையும் படைவீரர்களை துரிதமாக அப்புறப்படுத்த இவை உதவியாக இருக்கும் என கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன என்றும் கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. [இ]

## விசைப்படகு பறிபோனது:

# கடற்படைத் தளபதி வடபகுதிக்கு விரைவு

கடந்த சனிக்கிழமை அதிகாலை மண்டைதீவு கூட்டு இராணுவ கடற்படைத் தளத்தில் தமித்து நின்ற சமயம் விடுதலைப் புலிகளின் கடற்புலி வீரர்களின் தாக்குதல் அணியினரால் கைப்பற்றப்பட்ட விசைப்படகு பிரிட்டிஷ் தயாரிப்பான 'வாட்டர் ஜெட்போட்' என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது.

கைப்பற்றப்பட்ட இந்த 'டிங்கி' மிகவும் விலை உயர்ந்த படகு என்றும்—

இச்சம்பவம் பாதுகாப்பு வட்டாரங்களை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது என்றும்—

இது பற்றி விசாரணை நடத்துவதற்காக கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் கிளாரென்ஸ் பெர்னாண்டோ வடபகுதி சென்றுள்ளார் என்றும்— அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'டிங்கி' படகு கைப்பற்றப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து வடபகுதியில் உள்ள கடற்படைத் தளங்கள் உஷார்ப்படுத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ]

## படையினருக்கு தொடர்பில்லையாம்!

கொழும்பு, செப். 1

அலிஞ்சிப் பொத்தான, முத்துக்கல, கரப்பொல கிராமங்களில் கடந்த ஏப்ரல் 9ஆம் திகதி சிவிலியன்கள் கொல்லப்பட்ட சம்பவங்களில் பாதுகாப்புப் படையினரோ, கரப்பொல பொலீஸாரோ சம்பந்தப்படவில்லை என்றும் —

அவ்வாறு வெளியான செய்திகளில், உண்மையில்லை என்றும் அது தொடர்பாக விசாரணை நடத்திய ஜெயலத் கமிட்டி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [த-5]

# அரச சார்பு தமிழ் குழுவுடன் ராணுவ அதிகாரிகள் பேச்சு

கொழும்பு, செப். 1

அரச சார்பு தமிழ்க்குழு ஒன்றின் தலைவருடன் உயர்நிலை இராணுவ அதிகாரிகள் கடந்த வெள்ளிக்கிழமை பேச்சுகள் நடத்தினார்கள்.

தகவலறிந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'சண்டே ஐலண்ட்' இச் செய்தியை வெளியிட்டிருக்கிறது.

இராணுவத் தலைமைக் காரியாலயக் கட்டடத்தில் உள்ள கூட்டுப்படைகள் அலுவலகத்தில் அப் பேச்சுகள் இடம் பெற்றதாகவும் —

லெப்டினன்ட் ஜெனரல் கொப்பேகடுவ கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்ட பின்னர் குறிப்பிட்ட தமிழ்க் குழுவுடன் இராணுவத்தினர் முதன் முறையாக நடத்திய பேச்சுவார்த்தை அது என்றும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட தமிழ்க் குழு, விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் அரச படையினருடன் சேர்ந்து செயல்பட்டு வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ள பகுதிகளில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த தாம் திட்டமிட்டுள்ளதாக படை அதிகாரிகள் பேச்சுக்களின் போது தெரியப்படுத்தினர் என்றும் 'சண்டே ஐலண்ட்' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [த-எ]

## சுதந்திரக்கட்சி உட்பூசல்: தீர்வு காணப்பட்டுள்ளது

கொழும்பு, செப். 1

சுதந்திரக் கட்சிக்குள் இருந்து வரும் அனுரா—சந்திரிகா மோதலை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியில் நடுநிலைக் குழு ஒரு இணக்கமான தீர்வை கொண்டுவந்துள்ளதாக தெரிகிறது

உட்கட்சித் தேர்தலை நடத்துவது குறித்து உடன்பாடு காணப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை மனுமீதான தீர்ப்பு வெளியான பின்னர் உட்கட்சித் தேர்தலை நடத்துவது என்றும்—

போட்டியின்றி நிர்வாகிகளைத் தெரிவு செய்வதில் கருத்துடன்பாடு காணுவது என்றும் உடன்பாடாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. [த-எ]

## இடம் பெயர்ந்த மக்களுக்கு குடிசைகள்

உடுவில், செப். 1

வலிகாமம் தெற்கில் இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து மானிப்பாய், நவாலி, ஆனைக்கோட்டை, சண்டிலிப்பாய் பகுதிகளில் தங்கியுள்ள மக்களுக்கு தேவையான குடிசைகளை அமைத்துக் கொடுக்கும் பணியில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பாடசாலைகள், கோவில்களில் தங்கி உள்ளவர்களுக்கு வெற்று நிலமாக உள்ள காணிகளில் குடிசைகள் அமைக்கப்பட உள்ளதாக தெரிய வருகின்றது. [த-162]

# மெய்ப்பாதுகாவலரை பாதுகாக்க முயன்றபோதே லலித்துக்கு பொல்லடி

கொழும்பு, செப். 1

கடந்த சனிக்கிழமை தெஹிவளையில் இடம்பெற்ற சம்பவத்தில் தமது மெய்க்காப்பாளர்களைக் காப்பாற்ற முயன்றபோதே லலித் அத்துலத்முதலி தாக்கப்பட்டார் என்று கூறப்படுகிறது. அவரது காவில் ஒருவர் பொல்லால் அடித்தார் என்று புகார் செய்யப்பட்டுள்ளது.

லலித் அத்துலத்முதலியின் மெய்க்காப்பாளர்கள் மூவரும் வெட்டுக் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தெஹிவளை கவ்டானா சந்தியில் தமது புதிய கட்சிக்கு அங்கத்தவர்களைச் சேர்க்கும் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோதே லலித்தும் அவரது மெய்ப்பாதுகாவலர்களும் இனந்தெரியாதவர்களினால் தாக்கப்பட்டனர்.

இச் சம்பவத்தை அடுத்து லலித் அத்துலத்முதலி பொலீஸ் நிலையம் சென்று முறைப்பாடு செய்தார்.

தம்மைத் தாக்கியவர்களில் சிலரை அவர் அடையாளம் கண்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ]

# உடுப்பிட்டி வாலிபரை விடுவிக்க கோரி மனு

கடந்த ஒரு வருடமாக கொழும்பு பொலீஸ் தலைமைக் காரியாலய 6ஆம் மாடியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள உடுப்பிட்டி வாலிபர் ஒருவரை விடுதலை செய்யுமாறு அவரின் தாயார் ஆட்கொணர்வு மனுத்தாக்கல் செய்துள்ளார்.

தமது சகோதரனின் ஏற்பாட்டில் வீசா பெற்று அவுஸ்திரேலியா செல்ல ஆயத்தமாகி இருந்த சமயம் கைதான செல்லையா சுந்தரமூர்த்தியே இந்த வாலிபர் ஆவார்.

இவரது விடுதலை வேண்டி இமையாணன்—கிழக்கு உடுப்பிட்டியைச் சேர்ந்த தாயாரான வள்ளியம்மாள் செல்லையா ஆட்கொணர்வு மனு வைத் தாக்கல் செய்துள்ளார்.

கப்டன் சல்மான் தலைமையிலான இராணுவத்தினர் கடந்த ஆண்டு ஆகஸ்ட் 30ஆம் திகதி வெள்ளவத்தை டபிள்யூ ஏ சில்வா மாவத்தையில் உள்ள வீடு ஒன்றில் வைத்து இந்த வாலிபரைக் கைது செய்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ)

# இரு நினைவுப் பேருரைகள்

யாழ் பல்கலைக்கழகத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் பட்டமளிப்பு விழாக்கால நிகழ்ச்சித் தொடரில் வழமையாக இடம்பெறும் இரு நினைவுப் பேருரைகள் இம்முறையும் இடம்பெற உள்ளன.

முதலாவதாக இடம்பெறும் பெருமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையைப் பேராசிரியர் வி. சிவசாமி நிகழ்த்துவார். ''இலங்கைத் தமிழரும், சமஸ்கிருத மரபுகளும் ஒரு வரலாற்று நோக்கு'' என்னும் பொருள் பற்றிய இப்பேருரை எதிர் வரும் 7ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

அடுத்த நாள் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் சேர். பொன் இராமநாதன் நினைவுப் பேருரையில் கலாநிதி எஸ். கே. சண்முகநாதன் ''திருவள்ளுவர் வகுத்த அரசியல் விழுமியங்கள்'' என்னும் பொருளில் உரை நிகழ்த்துவார். (த)


கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு
ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் கோவில்
(காளி கோவில்)

# வருடாந்த மகோற்சவம்

மேற்படி ஆலய வருடாந்த மகோற்சவம் 02 - 09 - 1992 புதன்கிழமை காலை 10-30 மணிக்கு கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி 11-09-1992 வெள்ளிக்கிழமை தீர்த்த உற்சவத்துடன் நிறைவு பெறும்.

விசேட உற்சவங்கள்

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | — | 02 - 09 - 1992 புதன்கிழமை காலை 10-30 மணி |
| சப்பரத் திருவிழா | — | 09 - 09 - 1992 புதன்கிழமை மாலை 6-00 மணி |
| தேர்த்திருவிழா | — | 10 - 09 - 1992 வியாழக்கிழமை காலை 9-00 மணி |
| தீர்த்த உற்சவம் | — | 11 - 09 - 1992 வெள்ளிக்கிழமை காலை 10-00 மணி |
| பூங்காவனம் | — | 12 - 09 - 1992 சனிக்கிழமை |

மாலை 7-00 மணி முதல் 8-00 மணி வரை கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் அவர்களால் பெரியபுராண தொடர் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படும்.

- ஆலய பரிபாலன சபையினர்.

[22376]



# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

93 A/L கலை, வர்த்தகம்
வினா-விடை வகுப்புக்கள்

புதிய பிரிவு ஆரம்பம்: 05-09-1992.
காலை 8 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. கலாகரன் |
| வர்த்தகம் | — | திரு. தேவா |
| கணக்கியல் | — | திரு. வன்னியசிங்கம் |
| அளவையியல் | — | திரு. சுப்பிரமணியம் |
| இந்துநாகரிகம் / இந்து சமயம் | — | திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| புவியியல் | — | திரு. குணராசா |
| அரசியல் | — | திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | — | திரு. சிறீதரன் |

குறிப்பு:
★ எமது மாணவர்களின் பெறுபேறுகளே எமது உத்தரவாதம்.
★ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

[கி-3183]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மேசைகள், வாங்குகள், சந்தோர் வாங்குகள், இலாச்சி மேசைகள், வீட்டுச் சோக்கேஸ், கடைச் சோக்கேஸ், அலுமாரிகள், ஜன்னல், கதவுகள், இரும்புக் கதவுகள் (கேற்) விற்பனைக்குண்டு. தொடர்பு: 07, கைலாசபிள்ளையார் கோவில் பின் வீதி, நல்லூர். (22332)

## புலமைப்பரிசில் பரீட்சை

23 - 08 - 1992 அரசாங்கத்தால் நடத்தப்பட்ட ஆண்டு-5 [புலமைப் பரிசில்] பரீட்சை வினாத்தாள்கள் - விடைகளுடன் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். Bond Institutes, 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[சி-3162]

## இன்று செவ்வாய் மாற்றம்

இன்று முதல் மிதுனராசியில் 63 நாட்களுக்கு சஞ்சரிக்கும் போது வக்கிரச் சனியையும், வியாழனையும் நோக்குவது நாட்டுக்கு நன்மையல்ல (நூலாசிரியர் சத்தியதாஸன்). O/L கடந்த கால வினா - விடைகள், பாடசாலைக் கொப்பிகள், புத்தகங்கள் விற்பனைக்குண்டு. தினேஷ் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். [22378]

## காணவில்லை

Asia 02 C 8973 [ஆண்கள்], Asia 020 9134 [பெண்கள்], Raleigh CG 67289 [பழைய ஆண்கள்], Eastern [பெண்கள் - ஆண்களின் சைக்கிள் அளவுடையது, பழையது] 08 - 08 - 1992 இரவு வீட்டு கராஜிலிருந்து காணாமல் போய்விட்டது தகவல் தெரிந்தோர் உடன் தொடர்பு கொள்ளவும்! ஆ. சபாரத்தினசிங்கம், இல. 94, பழைய பூங்கா வீதி, சுண்டிக்குளி. வாங்கியிருந்தால் நட்டஈடு வழங்கப்படும். [22379]

## சன்மானம்

28 - 08 - 1992இல் ஆலடி வேணி இறங்குதுறைப் பகுதியில் ரொக்கப் பணம், 611092393 V இலக்க அடையாள அட்டை, விடுதலைப் புலிகளின் அனுமதி அட்டை, மூக்குக் கண்ணாடி மற்றும் முக்கிய பொருள்களுடன் இரண்டு பயணப் பொதிகள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். ம. திலகரத்தினம், பலாலி ஆசிரியர் கலாசாலை, திருநெல்வேலி. [22374]

## உடன் தேவை

ஆறு(6)முதல்-பத்து(10) கே.வி. இங்இன் பேஸ் ஜெனரேற்றர் ஒன்று உடன் வாடகைக்குத் தேவை. க. முத்துக்குமாரசாமி 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

[சி-3214]

## துர்க்கா திருமண சேவை

31-8 92 தொடக்கம் துர்க்கா திருமண சேவை. சிவசக்தி ஸ்ரோர்ஸ் இல. 194, நாவலர் றோட், யாழ்ப்பாணம். சகலரும் மேற்கூறிய முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

[4954]

## தவறிவிட்டது

30 - 08 - 1992 ஞாயிறு அதிகாலை கிளாலியூடாக யாழ். வரும் வழியில் முக்கிய ஆவணங்கள், பொருள்கள் அடங்கிய நீல நிற பிரயாணப் பை ஒன்று படகில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் திருமதி எஸ். இராதாகிருஷ்ணன், 158 சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கு முகவரியில் தயவுசெய்து ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

[22381]

# இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி



| அன்னையின் மடியில்: | ஆண்டவன் அடியில்: |
|---|---|
| 24 — 08 — 1945 | 25 — 08 — 1990 |

## அமரர் ஏரம்பு துரைராசா

(மண்கும்பான்)

(வேலணை கிழக்கு - கிராமசேவையாளர்)


எங்கள் இதயந்தனில் உறைந்திட்ட துரையே-உன்னை
இரக்கமின்றிக் கொன்றதே காடை
மறக்க முடியாமல் துடிக்கின்றோம் நாங்கள் - எங்கள்
மனத்துயர் தீர்த்திட வருவாயோ நாளை.

உங்கள் பிரிவால் வாடும்!
தாய், சகோதரன், சகோதரிகள்,
மைத்துனர், மருமக்கள்.

146/4. கோவில் வீதி,
நல்லூர்.

(22351)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 19 — 03 — 1917 | 02 — 08 — 1992 |

அமரர்

## வைத்திலிங்கம் கனகரத்தினம்

[அப்பையா]

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


இன்று (01-09-1992) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமகள், சகோதரர்கள்,
மைத்துனர்கள், உறவினர்கள்.

லவ் லேன்,
உடுவில்.

[சி/3203]

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 16 — 02 — 1911 | 02 — 08 — 1992 |

அமரர்

## பேதுருப்பிள்ளை வெலிச்சோர்

(பொன்னுத்துரை)

எம் அன்புத் திருவுருவே! யாழ் நகரில் பிறந்து
மிருசுவிலில் திரவியம் என்னும் துணையாளுடன்
மிகச் சிறப்புடன் ஈரைந்தும் பெற்றீர் - ஐயா!
மரியன்னையின் பக்தனாய் மரிக்கும்வரை -
வாழ்ந்தீர் ஐயா!
நாட்கள் பல கழிந்தாலும் நாம் உம்மை மறவோம் - ஐயா!
இறைவன் கருணையினால் இனிய இன்ப வீட்டில்
மகிழ்வுடன் வாழ்ந்திட மனையுடன் சுற்றம் நாம் -
வேண்டுகிறோம் ஐயா!

இவரின் பிரிவால் துயருறும்;
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை,
உறவினர்கள்.

16, ''பத்திமா அவனியூ'',
மிருசுவில்.

[22375]

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

[கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

## A/L 93 கலை, வர்த்தகம்

Day Classes 8-00—2-00

புதிய பிரிவுகள்

ஆரம்பம்: 03-09-1992 [வியாழன்]

**பொருளியல்: திரு. கலாகரன்**
பிரிவு I அலகு 1லிருந்து (பாடத்திட்டம்) 8-00 — 9-30
,, II வினா-விடை 9-30 — 11-00

**கணக்கியல்: திரு. பிரபாகரன்**
பிரிவு I அலகு 1லிருந்து (பாடத்திட்டம்) 11-00 — 12-30
,, II வினா-விடை 12-30 — 2-00

**வர்த்தகம்: திரு. இரகுநாதன்**
பிரிவு I அலகு 1லிருந்து (பாடத்திட்டம்) 12-30 — 2-00
,, II வினா-விடை 11-00 — 12-30

**அளவையியல்; திரு. A. பிரபாகரன்**
பிரிவு I அலகு 1லிருந்து (பாடத்திட்டம்) 9-30 — 11-00
,, II வினா-விடை 8-00 — 9-30

## Evening Classes [செவ், வியாழன்]

**இந்து நாகரிகம்; காரைசுந்தரம்பிள்ளை**
வினா-விடை 3-00 — 4-00

**தமிழ் திரு. குழந்தை**
வினா-விடை 4-00 — 5-00

குறிப்பு: எமது மாணவர்களின் பெறுபேறுகளே எமது உத்தரவாதம்!

(இ-3186)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல் மனு மீது தீர்ப்பு:

# பாதுகாப்பு நடவடிக்கைகள் உஷார் நிலையில்!

கொழும்பு, செப். 1

ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேபனை மனு மீதான தீர்ப்பு வழங்கப்படும் தினமன்று பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக சிரேஷ்ட பொலீஸ் அதிபர் ரொனி குணசிங்கா இருப்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்பு ஒழுங்குகள் பற்றி கடந்த வெள்ளிக்கிழமை சிரேஷ்ட பொலீஸ் அதிபர் குணசிங்காவும் வேறு இரு பொலீஸ் அதிகாரிகளும் உயர்நீதிமன்றப் பதிவாளர் பந்துல் அத்தபத்துவை அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேச்சுகள் நடத்தினர்.

அச்சந்திப்பின்போது, உயர்நீதிமன்றப் பிரதிப் பதிவாளர் எம். ஏ. சிறில், உயர் நீதிமன்ற வளாக மார்ஷல் (பிரதம பாதுகாப்பு அதிகாரி) பிரிகேடியர் ஜோர்ஜ் பெர்னாண்டோ, பொலீஸ் அதிபர் ரஞ்சித் பெரேரா, கெஸல்வத்தை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி பனமல்தெனியா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதற்கு முன்னர் உயர்நீதிமன்ற வளாக மார்ஷல் பிரிகேடியர் பெர்னாண்டோ பொலீஸ்மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேராவுக்கு எழுதிய இரகசியக் கடிதம் ஒன்றில், வழக்கில் தீர்ப்பு வழங்கும் நீதியரசர்களுக்கு மேலதிகப் பாதுகாப்பு மற்றும் சீன அரசினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட உயர் நீதிமன்ற வளாகத்துக்கு போதுமான பாதுகாப்பு ஆகியன வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி இருந்தார்.

கடிதத்தையில் இடம்பெற்ற படை அதிகாரிகளின் மரணச் சடங்குகளின்போது ஏற்பட்ட வன்செயல் பற்றியும் அக்கடிதத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது. [எ-த]

## உலக கின்னஸ் புத்தகத்தில் ஜனாதிபதித் தேர்தல் வழக்கு

கொழும்பு, செப். 1

உலக கின்னஸ் புத்தகத்தில் 1988 ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை மனு மீதான வழக்கும் இடம்பெற உள்ளது.

இந்த வழக்கு பற்றிய விவரங்களை தமக்கு அனுப்பும்படி கின்னஸ் சாதனை புத்தகத்தின் பிரதி ஆசிரியர் நிக்கலஸ் ஹீத் பிரவுன் கொழும்பு உயர் நீதிமன்றப் பதிவாளருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றார்.

"19-12-1988 இல் நடந்த ஜனாதிபதி தேர்தலில் திரு. பிரேமதாஸா வெற்றியீட்டியதை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு பற்றிய செய்தியை 01-07-1992 இல் வெளியான 'லண்டன் ரைம்ஸ்' பத்திரிகையில் கண்டோம்.

"இவ் வழக்கு பற்றிய கூடுதல் விவரங்களை அறிய ஆர்வமாக உள்ளோம்" — என்று திரு. பிரவுன் தமது கடிதத்தில் எழுதியிருக்கிறார்.

தேர்தல் ஆட்சேபனை மனு 09-01-1988 இல் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. 453 நாள் விசாரணையின் பின்னர் மனு மீதான தீர்ப்பு வழங்குவதை உயர் நீதிமன்றம் 01-07-1992 அன்று ஒத்தி வைத்தது. [த-எ]

## பருத்தித்துறையில் மாவீரருக்கு அஞ்சலி

வடமராட்சி, செப். 1

மாதகலில் கடந்த 27ஆம் திகதி ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவை எய்திய ஒன்பது மாவீரர்களின் உருவப் படங்களுக்கு நேற்று முன்தினம் இரவு பருத்தித்துறையில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ். மாவட்ட கடற்புலிகள் பொறுப்பாளர் தலைமையில் நடைபெற்ற அஞ்சலி வைபவத்தில் வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா, கலை பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் திரு. பாஸ்கரன், பருத்தித்துறை வட்ட அவைப் பொறுப்பாளர் திரு. பைந்தமிழன், மகளிர் பிரிவைச் சேர்ந்த செல்வி பூங்கோதை ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர். [த-165]

## பாகிஸ்தானிய பிரஜைகள் சிக்கினர்

பாகிஸ்தானில் இருந்து 25 இலட்சம் ரூபா பெறுமதியான ஒரு கிலோ 'பிறவுண் சுகர்' என்னும் போதைப் பொருளை கடத்தி வந்த இரண்டு பாகிஸ்தானியப் பிரஜைகள் நேற்று முன்தினம் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளிடம் அகப்பட்டனர். [த-5]


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் 92-09-30 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

பதவி: தொழில் நுட்பவலர் தரம் 11 'ஏ'

சம்பள அளவுத் திட்டம்: ரூபா 2 375 — 11 x 50 — 2 925 (மாதாமொன்றிற்கு) (இவை தவிர அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப் படிகளும் செலுத்தப்படும்)

தகைமைகள்:

(அ) சிறப்புத் தேர்ச்சி பெற்ற உரிய துறையில் தொழில் நுட்பவியல் தேசிய டிப்ளோமா அல்லது அதற்குச் சமனான தகைமை

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப் பெற்ற நிறுவனமொன்றில் தொழில் நுட்பவியலாளராக பத்தாண்டுகளுக்குப் பொருத்தமான அனுபவம்

வயது: 40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு: செய்முறைப் பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும் நடைபெறும்.

குறிப்பு:

பின்வரும் தகைமை உடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

(அ) இலத்திரனியலில் அல்லது இயந்திரப் பயிற்சித் துறைகளில் பணியாற்றக் கூடிய அறிவைப் பெற்றுள்ளோர்

அல்லது

(ஆ) இயந்திரப் பொறியியலில் தேசிய தொழில் நுட்ப டிப்ளோமாவில் சித்தி பெற்று கடைசல் இயந்திரத்தில் பணியாற்றும் அனுபவம் பெற்றுள்ளோர்

அல்லது

(இ) இலத்திரனியலில் தேசிய தொழில் நுட்ப டிப்ளோமாவில் சித்தி பெற்று இலத்திரனியல் கருவிகளைத் திருத்துவதில் அனுபவம் பெற்றுள்ளோர்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப் படிவங்களும் விவரங்களும் இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (தாபனக் கிளை) அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். விண்ணப்பப் படிவங்களைத் தபாலில் பெற விரும்புவோர், விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு 23x10 ச.மீ. அளவுடைய தபாலுறை அனுப்பப்படல் வேண்டும். விதிக்கப் பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

குறித்த திகதியின் பின்பு கிடைக்கும் விண்ணப்பங்களும், தெளிவாக விவரங்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

– பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

1992 – 08 – 24

[இ-3212]



மகளிருக்கான

டிப்ளோமா மனையியலும், கைத்திறனும் பயிற்சிகள்

★ கேக் ஐசிங்
★ தையற் கலை
★ சமையற் கலை
★ கூந்தல் அலங்காரம்
★ கைப்பணி
★ பூ வேலை
★ வர்ணம் தீட்டுதல்
★ சித்திரக் கலை

பயிற்சிக் காலம் 6 மாதங்கள்

பயிற்சி முடிவில் Diploma in Home Economics & Craft தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.

சனி, ஞாயிறு பயிற்சிகள் ஆரம்பம்: 06-09-1992
கிழமை நாள் பயிற்சிகள் ஆரம்பம்: 07-09-1992

மேலும் விவரங்களுக்கு:-

கலாலயா

விக்டோறியா வீதி,
(ஆஸ்பத்திரியின் பின்புறம்)
யாழ். நகர்.

[சி-3189]



3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

வீர ஜனனம்: 20 — 10 — 1974

வீர மரணம்: 01 — 09 — 1989

வீரவேங்கை திலகன்
(காசிலிங்கம் பிரபாகரன்)

திதி: 01 — 09 — 1992

விடுதலைப் பாதையில் திலகன் - இவன்
மொட்டு விரித்த காலம்
வசந்தத்தை தேடவில்லை - இவன்
விடியலை தேடினான்
எண்பத் தொன்பதிலே தன்னை
மண்ணிற்காய் மாவீரனானான்.

— குடும்பத்தினர்.

பால் பண்ணை வீதி,
திருநெல்வேலி.

[22383]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறிவிட்டது

சென்ற சனிக்கிழமை [29-08-1992] இரவு மீசாலை புகையிரத நிலையத்திற்கு அண்மையில் பிரதான வீதியில் எமது ஒலிவாங்கி (மைக்) ஒன்று தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**சாள்ஸ் ஒலி, ஒளி.**
ம. அன்பு,
மயூரன் வீதி, மீசாலை. (5287)



உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனேநம

**MATHAN GOLD WORK SHOP**

புதிய டிசைன்களில்

**சங்கீதா வளையல்கள்**

செய்யவும் உடனுக்குடன் அடித்துப் பெற்றுக்கொள்ளவும்

**★ மதன் தங்கத் தொழிற்சாலை ★**

301, கஸ்தூரியார் வீதி,
மேல்மாடி,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்:
K. ஞானசேகர்
(22368)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**கார்த்திகேசு செல்லத்துரை**

[ வேலணை கிழக்கு ]

ஜனனம்: 17-09-1918
மறைவு: 02-08-1992

அன்புத்தலைவனாய் இன்புடன் வாழ்ந்து
அயலவர் அன்பில் ஆரக்குளித்து
சிந்தை மகிழ்ந்து சிறப்புகள் எய்தி
சிவனடி சேர்ந்தார் என்றிருப்போமே!

அன்னாரின் ஆத்ம சாந்திக்காய் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

66/1, இந்து மகளிர் ஒழுங்கை,
பலாலி வீதி.
யாழ்ப்பாணம்.
[22360]

## கப்டன் தஸ நாயக்கா நியமனம்

கொழும்பு, செப் 1

கடற்படையின் புதிய வட பிராந்தியத் தளபதியாக கப்டன் தனப்பிரிய குமரசிறி தஸநாயக்கா நியமிக்கப்பட்டுள்ளார்.

வடபிராந்திய கடற்தளபதியாக இருந்து அராலி கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்ட றியர் அட்மிரல் றொகான் ஜெயமகாவின் இடத்துக்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார். [த-5]


**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

**A/L 93**
**Day Classes**

ஆரம்பம்:
08 - 09 - 1992
[8 மணி]

பொருளியல் — லோகலிங்கம்
வர்த்தகம் — பசில்
கணக்கியல் — Saam
அளவையியல் — சோதி
அரசியல் — கியூபேட்
இ. நாகரிகம், இ. சமயம் — அருள் நங்கை

மாலை வகுப்பு

தமிழ் — குழந்தை

[சி-3194]


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**சுவாம்பிள்ளை அன்ரனிப்பிள்ளை**
(பப்பா)

(இளைப்பாறிய அரச உத்தியோகத்தரும், முன்னாள் ஆசீர்வாதம் அச்சக முகாமையாளரும்)

பிறப்பு: 07-03-1901
இறப்பு: 01-09-1989

"ஜீவியத்தில் நேசித்தோம்
மரணத்திலும் மறவோம்"

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனி.

38, நச்சமோட்டை வீதி,
கண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
[22373]

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ். கிளைத் தலைமையகம்

## அறிவித்தல்


**வலி - வடக்குப்பிரிவு ஒத்திவைக்கப்பட்ட வருடாந்தப் பொதுக்கூட்டம் 1992 / 1993**

மேற்படி ஒத்திவைக்கப்பட்ட வலி-வடக்குப்பிரிவு வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (06-09-1992) காலை 9-30 மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலயத்தில் வலி - வடக்கு இடைக்கால நிர்வாகத் தலைவர் திரு. கே. நடராசா அவர்கள் தலைமையில் நடைபெறும். ஆகவே தகுதியுடைய அங்கத்தவர்கள் அனைவரையும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

ஏ. சி. செபநாயகம்,
தலைவர்.
(இடைக்கால நிர்வாகம்)

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
31-08-1992
(சி-3213)

# நீங்காத நினைவுகள்



**சுவாம்பிள்ளை புண்ணியசிங்கம் ஞானப்பிரகாசம்**

[இளைப்பாறிய தலைமை ஆசிரியர்,
புதுக்குடியிருப்பு.]

தோற்றம்: 09-07-1910
மறைவு: 01-09-1991



**இராசம்மா ஞானப்பிரகாசம்**

[இளைப்பாறிய ஆசிரியை,
யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம்.]

தோற்றம்: 12-12-1913
மறைவு: 04-07-1990

அன்பினால், பண்பினால், அயராத சேவையினால், இன்சொல்லால் அனைவரையும் ஆட்கொண்ட எங்கள் தெய்வங்களே!

உங்கள் ஆன்ம சாந்திக்காக இறைவனை என்றும் இறைஞ்சும்;

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

வீமன்காமம், தெல்லிப்பழை. [5281]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

உதயன்

## நோக்கம் தண்டிப்பதே!

1992 ஏப்ரலில் நடைபெற்ற ஜி. சீ. ஈ. உயர்தர விசேட பரீட்சை முடிவுகள் இம்முறை தமிழ்ப் பகுதிகளில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளன. அண்மைக் காலங்களில் வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் இந்தளவு அதம — கீழ்ச்சரிவான — நிலையை அடைந்திருப்பது இதுவே முகற்தடவை என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

வடக்கு - கிழக்கில் நடக்கும் யுத்தம் காரணமாக, 1990 1991 ஆம் ஆண்டுகளில் ஜி. சீ. ஈ. உயர்தர பரீட்சை நடத்தப்படவில்லை. பரீட்சைகளை நடத்தக்கூடிய பாதுகாப்பு மற்றும் அமைதிச் சூழ்நிலை அவ்வேளைகளில் பேணப்படவில்லை. அதற்கு அரசாங்கமே முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும்.

ஆனால் '92 ஏப்ரல் விசேட பரீட்சைப் பெறுபேறுகளை நோக்கும்போது, தான் செய்த தவறுக்காக அரசாங்கம் தமிழ் மாணவர்களை மீண்டும் தண்டிக்க முனைவது தெரிகிறது.

1991 ஏப்ரலில் நடைபெற்ற ஜி சீ. ஈ. உயர்தர விசேட பரீட்சையில் தமிழ் மாணவர்கள் பொதுவாகவே சிறப்பாகத் தேறி அதிக புள்ளிகளைப் பெற்றார்கள். அதனைச் சிங்கள இனவாதத் தலைவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. திறமை அடிப்படையில் அதிக எண்ணிக்கையான தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்றுவிடக் கூடும் என்று அவர்கள் அஞ்சினார்கள்.

அதனைத் தடுப்பதற்கு நாடாளுமன்றம் தொடக்கம் அமைச்சு ஆலோசனைக் கூட்டம் வரை விதண்டாவாதங்களும், குதர்க்க நியாயங்களும் பேசினார்கள்.

இறுதியில் பல்கலைக்கழக அனுமதிக்கு 1990 ஆகஸ்டில் தெற்கில் நடந்த பரீட்சையையும், 1991 ஏப்ரலில் வடக்கு-கிழக்கில் நடந்த விசேட பரீட்சையையும் தனித்தனிப் பரீட்சைகளாகக் கருதப் போவதாக அறிவித்தார்கள். தமிழ் மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதியில் கிடைக்கவிருந்த அதிக வாய்ப்பைத் தட்டிப் பறித்தார்கள்.

இதனை எதிர்த்துத் தமிழ் மாணவர் சார்பில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பது தெரிந்ததே.

தெற்கில் நடந்த வழமையான பரீட்சையையும் தமிழ்ப் பகுதிகளில் நடைபெற்ற விசேட பரீட்சையையும் ஒன்றாகக் கணிக்க வேண்டும் என்ற நிலைப்பாடு ஏற்பட்டுவிட்டால், 91 பரீட்சையில் தமிழ் மாணவர்களைத் தண்டிக்க முடியாமற் போகும். ஆகவே 92 பரீட்சைக்குத் தோற்றியவர்களைத் தண்டிப்பதை உறுதி செய்வதற்கான வஞ்சகமே அப்பரீட்சைப் பெறுபேறுகளை வீழ்ச்சி அடையச் செய்தமையாகும்.

வினாத் தாள்களைத் தயாரிப்பதிலும், விடைத் தாள்களைத் திருத்துவதிலும் வேண்டுமென்றே கடும்போக்குக் கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறது. இது தமிழர் மாணவர்களை எப்படியாவது தண்டித்துவிட வேண்டும் என்ற நோக்கத்தின் செயற்பாடன்றி வேறென்ன?

# ஈழ அகதிகளை அனுப்புவதை ஆட்சேபித்து மீண்டும் மனு!

சென்னை, செப். 1

ஈழத் தமிழ் அகதிகளைத் தமிழ் நாட்டிலிருந்து திருப்பி அனுப்புவதற்கு எதிராக மீண்டும் நீதிமன்றில் மனுச் செய்யப் போவதாக பட்டாளி மக்கள் கட்சியும், தமிழர் தேசிய இயக்கமும் அறிவித்துள்ளன.

இந்த இரு அமைப்புகளின தும் தலைவர்களான டாக்டர் இராமதாஸ், பி. நெடுமாறன் ஆகியோரர் ஏற்கனவே இந்த விவகாரம் தொடர்பாக சென்னை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர் என்பதும்—

அவர்களது மனுவை நீதிமன்றம் நிராகரித்து தீர்ப்பு வழங்கியது என்பதும் தெரிந்தவையே.

தமது தீர்ப்பின் தமிழ் மொழி பெயர்ப்பு தமிழகத்தில் உள்ள ஈழ அகதிகள் முகாம்கள் அனைத்திலும் விநியோகிக்கப்பட வேண்டும் நம்—

எதிர்காலத்தில் தாயகம் திரும்புவதற்கு விரும்பி அகதிகள் சமர்ப்பிக்கும் ஒப்புதல் கடிதங்கள் தமிழிலேயே இருக்கவேண்டும் என்றும் நீதிபதி திரு. ஸ்ரீநிவாசன் தமது தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் இந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளாத டாக்டர் இராமதாஸ், பி. நெடுமாறனும் மீண்டும் நீதிமன்றத்துக்கு மனுச்செய்ய உள்ளனர் என்று ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

இந்த மனு மீதான விசாரணை எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஈழ அகதிகள் தாயகம் திரும்புவதற்கு உரிய சூழ்நிலை இலங்கையில் இல்லை என அவர்கள் வாதிடுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

## பிரேமதாஸா...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

தெரிவிக்கிறது.

ஆனால் உயர்நீதிமன்றத் தீர்ப்பு இன்று வெளியாகும் வேளையில், பிரதமர் டி. பி. விஜேதுங்க நாட்டில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தோனேஷியத் தலைநகர் ஜகார்த்தாவில் நடைபெறும் கூட்டுச்சேரா நாடுகளின் மாநாட்டில் பங்குபற்றுவதற்காக பிரதமர் டி. பி. விஜேதுங்க நேற்றே கொழும்பை விட்டுப் புறப்பட்டுச் சென்றுவிட்டார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி பதவியில் இருப்பவர் தேர்தல் வழக்கில் தோல்வியுற்றால், பதில் ஜனாதிபதி பதவி சபாநாயகருக்கு வழங்கப்படும் என அரசமைப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. [உ]

## இரண்டு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொலை செய்த முதலாவது சிப்பாய் இவரல்லர்; இவர் அந்த வரிசையில் கடைசிச் சிப்பாயாகவும் இருக்கப் போவதில்லை'' — என்று ஷமிந்திரா பெர்டினன்டோ சண்டே ஐலண்ட் பத்திரிகையில் "7 ஆயிரத்துக்கு அதிகமான சிப்பாய்கள் காயம்" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். (த-எ)

## பூமியதிர்ச்சி...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

ரிகையில் செய்தி வெளியாகியுள்ளது.

கொப்பேகடுவ உயிருடன் இருந்த காலத்தில், வடக்கைக் கைவிட்டு கிழக்கில் இராணுவ பலத்தைப் பிரயோகிப்பது குறித்து உயர் மட்டத்தில் ஆராயப்பட்டதாகவும் —

கொப்பேகடுவ இதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததால் கிழக்கில் இராணுவ நடவடிக்கையை அதிகரிக்கும் திட்டம் கைவிடப்பட்டதாகவும் 'ராவய' பத்திரிகை மேலும் தெரிவிக்கிறது.

கொப்பேகடுவவின் 'ஜய சிக்ருறு' இராணுவ நடவடிக்கைக்காக வடக்கே அனுப்பப்பட்டிருந்த 5 படை அணிகளைச் சேர்ந்த 5 ஆயிரம் துருப்புக்கள், அத்திட்டம் கைவிடப்பட்டதை அடுத்து தற்போது திருப்பி அழைக்கப்பட்டுவிட்டதாகவும் —

தற்போது வடக்கில் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்திவிட்டு முழுக் கவனத்தையும் கிழக்கு மாகாணத்தில் செலுத்தவேண்டிய நிலைக்கு இராணுவத் தலைமைப் பீடம் தள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [இ-10]

## முன்னர் பெறத் தவறியோருக்கு

## மீளக் குடியமர்தலுக்கான நிவாரணக் கொடுப்பனவு

மீளக் குடியமர்தல் நிவாரணக் கொடுப்பனவு என்ற பெயரில் முன்னர் வழங்கப்பட்ட 2 ஆயிரம் ரூபாவை — வங்கிகள் மூலம் வழங்கப்பட்ட காலத்தில் பல்வேறு காரணங்களுக்காக பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு அதனை வழங்கும் நடவடிக்கையில் யாழ். செயலகம் தற்போது ஈடுபட்டுள்ளது.

இரண்டாண்டுகளுக்கு முன்னர் வழங்கப்பட்ட இந்தக் கொடுப்பனவை வங்கிகளில் பெற்றுக்கொள்ளத் தவறிய சுமார் 600 பேர்களுக்கு அவற்றை வழங்க யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த 600 பேரில் தெரிவு செய்யப்பட்ட முதல் தொகுதியினருக்குக் கொடுப்பனவை வழங்க, அவர்களுக்கு செயலக புனர்வாழ்வுப் பிரிவினர் கடிதம் மூலம் அழைப்பு விடுத்துள்ளனர்.

கடந்த சனியன்று சுமார் 70 பேர் செயலகத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கான கொடுப்பனவு விரைவில் வழங்கப்படவுள்ளது. (உ-5)

## இலங்கைக்கு ஆயுத விற்பனை:

## பிரிட்டனின் தடை உத்தரவு தொடர்ந்தும் அமுலில்!

கொழும்பு, செப். 1

இலங்கை மீது பிரிட்டிஷ் அரசாங்கம் விதித்த ஆயுத இறக்குமதித் தடை இன்னமும் நடைமுறையில் உள்ளது.

உயர்நிலை ராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'சண்டே ஐலண்ட்' செய்தி வெளியிட்டிருக்கிறது.

இவ்வருட இறுதியில் பிரிட்டிஷ் அரசின் பிரதி அமைச்சர் ஒருவர் கொழும்புக்கு விஜயம் செய்யவிருக்கிறார் என்றும் —

இது இலங்கை மீது பிரிட்டன் விதித்துள்ள கட்டுப்பாடுகள் தளர்த்தப்படக்கூடிய அறிகுறியாகத் தென்படுகிறது என்றும் கொழும்பில் பேச்சடிபடுகிறது.

உயர்நிலை ராஜதந்திர வட்டாரங்களிடம் இது குறித்து வினவிய போது —

ஆயுத மற்றும் பொருளாதாரத் தடை தொடர்ந்தும் அமுலில் இருப்பதாக அவை தெரிவித்தன.

உள்விவகாரங்களில் தலையிடுவதாகக் கூறி இலங்கை அரசு கொழும்பில் பணிபுரிந்து வந்த பிரிட்டிஷ் தூதர் டேவிட் கிளாட்ஸ்டோனைத் தொடர்ந்து இலங்கைக்கான பொருளாதார உதவிகள் அனைத்தையும் பிரிட்டிஷ் அரசு நிறுத்தி வைத்திருப்பதும் தெரிந்தவையே.

எனினும் இவ்வருட இறுதியில் பிரிட்டிஷ் பிரதி அமைச்சர் ஒருவர் இலங்கைக்கு விஜயம் செய்யவிருப்பது. இரு நாடுகளுக்கும் இடையே நிலவும் சீரற்ற ராஜதந்திர உறவில் சுமுக நிலை ஏற்படும் சாத்தியம் உண்டு என்று ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் ஆயுதத்தடை நீக்கப்படுவதற்கான சாதக நிலை தென்படவில்லை என்றும் அந்த ராஜதந்திர வட்டாரங்கள் குறிப்பிட்டன.

## திருமலை குண்டுவெடிப்பு:

## நிலைமையை அவதானிக்க அமைச்சர் குழு விஜயம்

நேற்று முன்தினம் திருகோணமலை நகரமத்தியில் இடம்பெற்ற பஸ் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவது சம்பந்தமான ஏற்பாடுகளைக் கவனிக்க ஜனாதிபதியின் பணிப்பின்பேரில் அமைச்சர்கள் ஜோசப் மைக்கல் பெரேராவும், வீரசிங்க மல்லிமாரச்சியும் நேற்று திருகோணமலைக்குச் சென்றனர்.

அந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 9 பேர் உயிரிழந்தனர். 35 பேர் காயமடைந்தனர். அவர்களில் மூன்று பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. 23 பேர் ஆஸ்பத்திரியில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அமைச்சர்கள் இருவரும் கடற்படைத் தளபதி கிளான்ஸி பெர்னான்டோ மற்றும் பிரிகேடியர் ஸ்ரீ பீரிஸ் ஆகியோருடன் ஆஸ்பத்திரிக்குச் சென்று காயமடைந்தவர்களைப் பார்வையிட்டனர்.

இதேவேளை — இக் குண்டு வெடிப்புச் சம்பவம் குறித்து விசாரணை நடத்த விசேட பொலீஸ் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. [உ-எ]

## கொழும்பில் இந்திய பிரஜை கைது: தங்கக் கட்டிகள்மீட்பு

கொழும்பு, செப். 1

புறக்கோட்டையில் 36 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கக் கட்டிகள் கைப்பற்றப்பட்டதாகவும் — இது தொடர்பாக இந்தியப் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

கடவலயில் இரசாயனத் தொழிற்சாலை ஒன்றை நடத்திவரும் தமிழ் நாட்டைச் சேர்ந்த இந்தியர் ஒருவரின் புறக்கோட்டை அலுவலகத்தை சோதனையிட்ட பொலீஸார் 6.6 கிலோ எடையுள்ள 36 இலட்சம் பெறுமதியான 56 தங்கக் கட்டிகளைக் கைப்பற்றினர். (த)

## ஜனாதிபதிக்கு மகஜர்!

யாழ்ப்பாணம், செப். 1

மட்டக்களப்பு வெள்ள வெளிப்பகுதியில் உள்ள 20 தமிழ கிராமங்களை சேர்ந்த மக்கள் தமது பாதிப்புக் குறித்து ஸ்ரீலங்கா அரசுக்கு மகஜர் அனுப்பியுள்ளனர். [த-3]

## மட்டக்களப்பில் தேர்தல் நடத்த முயற்சி

கொழும்பு. செப். 1

மட்டக்களப்பு மாநகர சபைக்கான தேர்தலை இவ்வாண்டின் இறுதியில் நடத்த அரச தரப்பில் முயற்சி எடுக்கப்பட்டிருப்பதாகச் செய்திகள் தெரிவித்தன.

இதற்கான ஏற்பாடுகளை தேர்தல் திணைக்களம் ஆரம்பித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## நாளை கலந்துரையாடல்

யாழ்ப்பாணம். செப். 1

ஆண்டு 9 வகுப்புக்குரிய வரலாற்றுத் துணை நூல் வெளியிடுதல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 10 மணிக்கு யாழ். கல்வித்திணைக்கள ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது சமூகக்கல்வி ஆசிரிய ஆலோசகர்கள் அனைவரையும், தனியார் பாடசாலைகளிலிருந்து ஒவ்வொரு பிரதிநிதிகளையும் தவறாது இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு யாழ். கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். [உ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவாலை வீதியில் வீடுகள் நொறுங்கிக் கிடக்கின்றன!

## மக்கள் உடைமைகள் வீதிகளில்!!

கொழும்பு, செப். 1

தெல்லிப்பழையில் இருந்து இளவாலை செல்லும் பாதையில் வீடுகள் பல உடைந்து நொறுங்கிய நிலையில் காணப்படுவதாகவும், வீடுகளுக்கு வெளியே குடங்கள், பானைகள், நாற்காலிகள், கட்டில் மெத்தைகள் என பல தரப்பட்ட பொருள்கள் வீசப்பட்டுக்கிடப்பதாகவும் பூமியதிர்ச்சி நடவடிக்கைக்குப் பின் இப்பகுதிக்கு விஜயம் செய்த கொழும்பு தமிழ் பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இருந்து இலங்கை விமானப்படையின் 4 ஆர். எச். வி. டி. விமானம் ஒன்றின் மூலம் பலாலி வந்த கொழும்புப் பத்திரிகையாளர் குழுவில் இந்த தமிழ் பத்திரிகையாளரும் அடங்கி இருந்தார்.

படையினர் இவர்களை பலாலியில் இருந்து இரு ஜீப் வாகனங்களில் தெல்லிப்பழை வரை கூட்டி வந்தனர். பின்னர் தெல்லிப்பழையில் இருந்து ''ஒப்பரேசன் பூமியதிர்ச்சி'' ஆரம்பமான பகுதியூடாக இளவாலைக்கும் மாதகலுக்கும் அழைத்துச் சென்றனர்.

பலாலியில் இருந்து தாம் பயணம் செய்த ஜீப்புகள், தெல்லிப்பழையை அடைந்த பின்னர் திடீர் என வெற்றிலைத் தோட்டம் ஒன்றை ஊடறுத்துச் செல்லும் பாதையில் ஓடத் தொடங்கின என்றும் —

பூமியதிர்ச்சி இராணுவ நடவடிக்கைக்காக இந்த திடீர் மணல் பாதையை படையினர் ஏற்படுத்தி இருந்தனர் என்றும் —

படையினர் இப்பாதையைப் போடுவதற்காக புல்டோசர்கள் மூலம் வீடுகளை உடைத்தும் மரங்களைப் பெயர்த்தும் பெரும் அழிவுகளைச் செய்திருந்தனர் என்றும் அப் பத்திரிகையாளர் தெரிவிக்கிறார்.

''பூமி அதிர்ச்சி ஏற்பட்டால் கட்டடங்கள் நொறுங்கும் மரம், செடி, கொடிகள் நாசமாகும் மற்றும் பல அனர்த்தங்களும் ஏற்படும்.

இராணுவ நடவடிக்கையான பூமியதிர்ச்சியிலும் கட்டடங்கள் நொறுங்கின மரம் செடிகள் நாசமாகின'' — இப்படித் தாம் நேரில் கண்டவற்றை அவர் வர்ணிக்கிறார்.

இப்பகுதிகள் சன நடமாட்டம் இன்றி வெறிச்சிட்டுக் கிடக்கின்றன. சில வீடுகளில் வெங்காயப் பிடிகள் தொங்கவிடப்பட்டிருந்தன. மற்றும் ஒரு வீட்டுக்குள் மூடைமூடையாக வெங்காயம் கட்டி வைக்கப்பட்டிருந்தது என்றும் அவர் தெரிவித்தார். (இ)

---

# கடந்த மாதத்தில் மட்டும் 10 அதிகாரிகள் உட்பட 67 படையினர் பலி!

யாழ்ப்பாணம், செப். 1

நேற்றுடன் முடிந்த ஆகஸ்ட் மாதத்தில் விடுதலைப் புலிகளின் சாதனை மிகு தாக்குதலில் 10 அதிகாரிகள் உட்பட 67 ஸ்ரீலங்காப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

அராலியில் மேற்கொள்ளப்பட்ட கண்ணி வெடித் தாக்குதலில் வடபிராந்திய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ உட்பட உயர் அதிகாரிகள் கொல்லப்பட்டமை—

வவுனியா நம்பைமடு முகாம் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை—

மண்டைதீவு கூட்டு இராணுவ பிரிவில் இருந்து நவீன ரக நீர் உந்து விசைப்படகு கைப்பற்றப்பட்டமை—

வெற்றிலைக்கேணியில் இராணுவ வேலியை ஊடறுத்து தாக்கியமை— போன்ற வீரமிகு சாதனைகள் இந்த மாதத்தில் புலிகளால் மேற்கொள்ளப்பட்டன.

ஒரு ஆர். பி. ஜி, 6 ஏ. கே. எல். எம். ஜி ஆகியவை, உட்பட 46 நவீன ரகத் துப்பாக்கிகள் மற்றும் பெருந்தொகையான இராணுவத் தளபாடங்களை புலிகள் கடந்த மாதத்தில் கைப்பற்றியுள்ளனர். (உ-8)

---

# லலித் கட்சிக் கூட்டத்தில் சிறிமாவுக்கு அகௌரவம்!

கொழும்பு, செப் 1

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு கம்பெல் பூங்காவில் நடந்த எதிர்க் கட்சிகளின் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி பேச எழுந்த போது ''எதிர்கால ஜனாதிபதிக்கு வெற்றி'' என அவரது ஆதவாளர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் எழுப்பினர் என்றும் —

பட்டாசுகள் கொளுத்தப்பட்டன என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அச்சமயம் கூட்டத்துக்குத் தலைமை வகித்த திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா முகத்தில் கவலை தென்பட இருக்கையில் நெளிந்து வளைந்தார் என்றும் 'சண்டே ஒப்சேவர்' செய்தி தெரிவிக்கிறது.

அனுரா பண்டாரநாயக்காவைகளைப் பின்னியபடி காணப்பட்டார் என்றும் —

திருமதி சந்திரிகா குமாரணதுங்கா கலவரமடையாமல் காணப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினால் ஒழுங்கு செய்யப்பட்ட இக்கூட்டத்தில் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

திருமதி சிறிமாவோ பேசும் போது, அவருக்கு கைதட்டல், வரவேற்பு மற்றும் பட்டாசு கொளுத்தல் எதுவும் இடம் பெறவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து ஏனைய எதிர்க்கட்சிகள் பொதுக்கூட்டம் ஒன்றை நடத்துவது இதுவே கடைசித் தடவையாக இருக்கும் என்று சுதந்திரக் கட்சியில் உள்ள சில முக்கியஸ்தர்கள் தெரிவித்தனர். (உ-எ)

---

# 10 லட்சம் கையொப்பங்கள் தயார் என்கிறார் லலித்!

கொழும்பு, செப். 1

ஜனாதிபதி பிரேமதாஸா பதவி விலகவேண்டும் என்று கோரும் மகஜரில் பத்துலட்சம் பேரின் கையொப்பங்கள் திரட்டப்பட்டுவிட்டதாக முன்னாள் அமைச்சர் அத்துலத்முதலி தெரிவித்திருக்கிறார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி இந்தக் கையெழுத்துத் திரட்டும் இயக்கத்தை நடத்தியது.

25 லட்சம் மக்களின் கையொப்பங்களுடன் பதவி விலகும் கோரிக்கை சமர்ப்பிக்கப்படின் தாம் பதவி விலகுவேன் என்று ஜனாதிபதி பிரேமதாஸா உத்தரவாதம் தருவாராயின்—

மேலும் 15 லட்சம் பேரின் கையொப்பங்களைச் சேகரிக்கத் தமது கட்சி தயாராக இருப்பதாகவும் திரு அத்துலத்முதலி தெரிவித்திருக்கின்றார். (உ-எ)

---

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை பொன்னம்மா

வேலுப்பிள்ளை பொன்னம்மா காலமானார் அன்னார் கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளையின் (எழுதுமட்டுவாள் சிவன் கோவில் தர்மகர்த்தா) அன்பு மனைவியாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (1-9-92) செவ்வாய் நண்பகல் 12 மணியளவில் எழுதுமட்டுவாளிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறேன்

தகவல்:
க. வேலுப்பிள்ளை

எழுதுமட்டுவாள். (22384)

---

## அகதிகள் வருகை மீண்டும் ஆரம்பம்

சென்னை, செப். 1

தமிழகத்தில் இருந்து 132 இலங்கைத் தமிழ் அகதிகள் நேற்று விமானம் மூலம் சென்னையில் இருந்து திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் இடைக்காலத் தடை உத்தரவின் மீது, தமிழ் அகதிகளை அவர்களது தாயகத்துக்கு அனுப்பி வைக்கும் பணி கடந்த சில தினங்களாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இத் தடை உத்தரவு ரத்தான பிறகு தமிழகத்தில் இருந்து அனுப்பப்பட்ட முதலாவது தொகுதி அகதிகள் இவர்கள் ஆவர் (இ-எ)

---

## பௌத்த..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்கும் எனத் தாம் நம்புவதாக மனித உரிமைகள் இயக்கத்தலைவரான பிக்கு ஒருவர் கூறினார்.

இம்முறை தமது விஜயத்தின்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள பொலீஸாரின் உறவினர்களையும் தங்களுடன் வடக்கே கூட்டிவரத் தாங்கள் திட்டமிட்டிருப்பதாகவும் குழுவின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

---

## ஸ்ரீலங்க சுதந்திரக் கட்சியின் 67 எம்.பிக்களை ராஜினாமா செய்யுமாறு கோரிக்கை!

### காமினி கேட்கிறார் இப்படி

கொழும்பு. செப். 1

ஜனாதிபதி பிரேமதாஸா தலைமையிலான அரசாங்கத்துக்கு மேலும் அழுத்தத்தைக் கொடுக்குமுகமாக சுதந்திரக் கட்சி எம்பிக்கள் பதவி துறக்க வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 25 ஆம் திகதி சுதந்திரக் கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவைச் சந்தித்துப் பேசிய போது, அவரிடம் நேரடியாக இந்தக் கோரிக்கையை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்களில் ஒருவரான முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கா சமர்ப்பித்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

திருமதி பண்டாரநாயக்கா இந்தக் கோரிக்கை குறித்து உடனடியாக திரு திஸநாயக்காவிடம் கருத்து எதனையும் வெளியிடவில்லை.

எனினும் இது குறித்து தான் திரு. அனுரா பண்டாரநாயக்காவுடன் பேசவேண்டும் என்று திருமதி பண்டாரநாயக்கா திரு. காமினி திஸநாயக்காவிடம் தெரிவித்தார்.

ஆனால் இந்த கோரிக்கை பெரும்பாலும் ஏற்கப்படமாட்டாது என்று கூறப்படுகிறது.

சுதந்திரக் கட்சியின் சார்பில் 67 எம்பிக்கள் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்றனர். (உ-எ)

---

## அகதிகள் இடமாற்றம்

யாழ்ப்பாணம், செப். 1

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தங்கியிருந்தவர்களில் சுமார் 75 அகதி குடும்பங்கள் நேற்று சாவகச்சேரிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கச்சாய் பகுதியில் அவர்கள் குடியமர்த்தப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது

இதேவேளை மல்லாகம் தேவாலய நிர்வாகத்தினர் சுமார் 70 குடும்பங்களுக்கு இருப்பிட வசதி செய்து கொடுக்க இணங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-5)

---

# பாலியல் வன்முறையின் பின் 11 வயது சிறுமி கொலை

## சரசாலையில் சம்பவம்

தென்மராட்சி, செப். 1

சிறுமி ஒருவர் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் சரசாலை வடக்கில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் மாலை பிரஸ்தாப சிறுமி சாணம் பொறுக்க வயல் வெளிக்குச் சென்றார் என்றும் —

அப்போதே இச் சம்பவம் இடம்பெற்றது என்றும் —

கொலையுண்ட சிறுமியின் சடலம் தேடுதலின் பின்னர் நேற்று அதிகாலை பற்றை ஒன்றில் இருந்து காவல் துறையினரால் மீட்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது

பதினொரு வயது நிரம்பிய கந்தசாமி ஷகீலா என்பவரே கொல்லப்பட்டவர் ஆவார்.

பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட பின்னர் கொலையாளியால் இவரது நகைகளும் அபகரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சிறுமியின் சடலம் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டு மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் என். அருள்லிங்கத்தினால் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது:

பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட பின் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டதாக மரண விசாரணையின் பின்னர் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இச் சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 17 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டு காவல் துறையினரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (இ-3-140-117)

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 01-09-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org